www.Padasalai.Net ...டுப் பொதுத் தேர்வு www.TrbTnpsc.com

HSL

**9** - ஆம் வகுப்பு

# தமிழ்

நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் :100

திருவண்ணாமலை மாவட்டம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. பகுதி - I** 15 X 1= 15

1. தமிழ்விடுதூது ........ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச் சொற்கள் ஆ) வட சொற்கள் இ) உரி சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

3. சாரதா சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
அ) 1929 ஆ) 1964 இ) 1930 ஈ) 1997

4. நாளிகேரம் என்பதன் பொருள்
அ) செல்வம் ஆ) முயற்சி இ) தென்னை ஈ) ஆலமரம்

5. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவன வீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

6. 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாடியவர் ........
அ) பெ.சுந்தரனார் ஆ) வெ.இராமலிங்கனார் இ) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் ஈ) சேக்கிழார்

7. **பொருத்தமான விடையைத் தேர்க.**
அ) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்
ஆ) நீரின்றி அமையாது யாக்கை - ஔவையார்
இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்
அ) அ, இ ஆ) ஆ, இ இ) அ, ஆ ஈ) அ, ஆ, இ

8. இளங்கமுகு, செய்கோலம் - இலக்கண குறிப்பு தருக.
அ) உருவகத் தொடர், வினைத்தொகை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத தொகை, உருவகத் தொடர்

9. சீவக சிந்தாமணியின் ஆசிரியர் .........
அ) தோலாமொழித் தேவர் ஆ) திருத்தக்க தேவர்
இ) கம்பர் ஈ) இளங்கோவடிகள்

10. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசிய திறனறி & கல்வி ஊக்கத் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

11. நச்சிலை வேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடுகின்ற நாடுகளின் முறையே
அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழநாடு, சேரநாடு
இ) சேரநாடு, சோழ நாடு ஈ) சோழநாடு, பாண்டிய நாடு

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

*அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ*
*வெள்ளம் தீப்பட்ட தென வெரீஇப் புள்ளினம் தம்*
*கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ*
*நச்சிலைவேல் கோக்கோதை நாடு*

12. பழனம் - என்பதன் பொருள்.
அ) மண் ஆ) சேறு இ) பழமை ஈ) மிக்கவயல்

13. இப்பாடல் எழுதப்பட்டுள்ள பா வகை
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

14. அரக்காம்பல் - இச்சொல்லைப் பிரித்தெழுதுக.
அ) அரக்கு + ஆம்பல் ஆ) அரக் + காம்பல் இ) அரக்காம் + பல் ஈ) அர + காம்பல்

15. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) மதுரைக் காஞ்சி இ) சீவக சிந்தாமணி ஈ) முத்தொள்ளாயிரம்

## பகுதி -II பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி. (21 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளி)** 4 X 2 = 8

16. **விடைகளுக்கேற்ற வினா அமைக்க.**
அ) சங்குகள் ஈனுகின்ற முட்டைகள், முத்துப்போல் இருக்கின்றன.
ஆ) சோழநாட்டின் யானைப்படை வலிமையானது.

17. நீங்கள் பேசும் மொழி எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

18. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

19. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் நான்கினை எழுதுக.

20. தருக்கொண்ட பச்சைப்பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

21. 'விடல்' என முடியும் குறளை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 5 X 2 = 10

22. ***பிழை நீக்கி எழுதுக.***
அ) பவளவிழிதான் பரிசு உரியவள் ஆ) குழலியும் பாடத் தெரியும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

23. *மரபுத் தொடர்களைக் கொண்டு தொடரமைக்க.*
அ) எட்டாக் கனி ஆ) கிணற்றுத் தவளை

24. *கலைச் சொற்கள் தருக.*
1. Indian National Army 2. Sugarcane Juice

25. **தொடரை பழமொழி கொண்டு நிறைவு செய்க.**
1) இளமையில் கல்வி ........ 2) கற்றோர்க்குச் சென்ற ........

26. *பொருத்தமான பெயரடைகளை எழுதுக.* *(நல்ல, பெரிய, கொடிய)*
1. .......... ஓவியமாக வரைந்து வா. 2. ......... விலங்கிடம் பழகாதே.

27. **பிழை நீக்கி எழுதுக.**
அ) சூறாவளியின் போது மேல்மாடியல் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்

28. **தமிழ் எண்களில் எழுதுக.**
அ. அரையாண்டுத் தேர்வில் நீங்கள் பெற விரும்பும் மொத்த மதிப்பெண் ........
ஆ. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் எண்ணிக்கை .........

## பகுதி - III பிரிவு - I

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 X 3 = 6

29. டோக்கியே கேடட்ஸ் - குறிப்பு வரைக.
30. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
31. உரைப்பத்தியைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.
பெரியார் தோற்றுவித்த இயக்கம் சுயமரியாதை இயக்கம். இது 1925 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பெரியார் குடியரசு, விடுதலை, உண்மை போன்ற இதழ்களை நடத்தினார். ரிவோல்ட் என்ற ஆங்கில இதழையும் நடத்தினார்.
அ. சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்? ஆ. பெரியார் நடத்திய இதழ்கள் யாவை?
இ. இப்பத்திக்கு பொருத்தமான தலைப்பு தருக.

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 34 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2 X 3 = 6

32. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?
33. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.
34. **அடிபிறழாமல் எழுதுக.**
அ. "பூவாது காய்க்கும்" எனத் தொடங்கும் சிறுபஞ்ச மூலம் பாடலை அடிபிறழாமல் எழுதுக. *(அல்லது)*
ஆ. "ஒன்றறி வதுவே" எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2 X 3 = 6

35. இயல்புப் புணர்ச்சி மற்றும் விகாரப் புணர்ச்சி விளக்குக.
36. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
37. பகுபத உறுப்பிலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 X 5 = 25

38. பெரிய புராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)*
"தூது அனுப்ப தமிழே சிறந்தது" - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

39. முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது? *(அல்லது)*
*மொழி பெயர்க்க.*
அ. Walk like a bull ஆ. Love your food
இ. Union is strength ஈ. Thinking is great
உ. Strengthen the body

40. அ) "எனது பயணம்" என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக. *(அல்லது)* ஆ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் கால் முளைத்த - கதைகள் என்னும் நூல் குறித்த கருத்துக்களை கடிதமாக எழுதுக.

41. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



ஆ. நிற்க அதற்குத் தக - எனக்குப் பிடித்தவாறு என் பொறுப்புகள்.

42. **ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக.**
அ. எனக்கு ........ பங்கு பிரித்து கொடுக்க வா!
கீழே ஈரம் பார்த்து உன் ......... ஐ வை.
ஆ. கைப்பொருளைக் கடல் ........... யில் தொலைத்து விட்டு கரையில் தேடி ....... ந்தால் கிடைக்குமா?
இ. தமிழ் எண்களை எழுதுக : 120, 534, 99.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 X 8 = 24

43. அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணைய வழிச் சேவைகள் பற்றி விரிவாக தொகுத்து எழுதுக. *(அல்லது)* ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை எழுதுக.

44. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதை 'செய்தி' கதை மூலம் விளக்குக. *(அல்லது)*
எங்கள் ஊர்ச்சந்தை - என்னும் தலைப்பில் நாளிதழ் செய்தி ஒன்றை எழுதுக.

45. அ) இந்திய விண்வெளித் துறை பற்றி செய்திகளை விவரிக்க. *(அல்லது)*
ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை எழுதுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com